**விகாரி ஆண்டு ஆவணி 20ம் 06.09.2019ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30மணிக்கு திருவாரூர் நகர்மன்ற சாதாரணகூட்டம் நடைபெறும் அப்பொழுது கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் முன்னிலை.திரு.என். சங்கரன்பிகாம்,எச்டிசிம்., ஆணையர் மற்றும் தனி அலுவலர்**

| பொருள் எண் மற்றும் கூட்ட பொருள்கள் விபரம் | தீர்மான எண். |
|---|---|

மன்ற தீர்மான எண்.101
அனுமதிக்கப்பட்டது

பொருள்.1

திருவாரூர்நகராட்சிஎல்லைக்குட்பட்டபழுதடைந்தநிலையில்உள்ளதார்சாலைகளைசெப்பனிடதமிழ்நாடுநகர்புறசாலைகள்உட்கட்டமைப்புதிட்டம் 2019-2020ன் கீழ் ரூ.100.00 இலட்சத்திற்கு திட்ட அறிக்கைகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்17349/2019/இ3 நாள்.03.09.2019ல் திருவாரூர் நகராட்சிக்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.அதன்விபரம்பின்வருமாறு.

மான்யவிபரம்

| வ.எண் | விபரம் | மதிப்பீட்டுத்தொகை(இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தமிழ்நாடுநகர்புறசாலைகள்மேம்பாட்டுதிட்டமானியநிதி | ரூ.35.00 |
| 2 | மாநிலநிதிக்குழு/மத்தியநிதிக்குழுமானியநிதி/நிலஅபிவிருத்திகட்டணம் | ரூ.45.00 |
| 3 | நகராட்சிபங்களிப்பு | ரூ.20.00 |
| | ஆகமொத்தம் | ரூ.100.00 |

பணியின்விபரம் - சிப்பம்-1

| வ.எண் | பணியின்விபரம் | வார்டு எண் | நீளம்(கி.மீ) | அகலம்(மீட்டர்) | மதிப்பீடு(ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | திருவாரூர்நகராட்சிக்குட்பட்டபெருமாள்மடவிளாகம், சிவபிரகாசமடத்தெருமற்றும்தென்றல்நகர், முதலியசாலைகளைதார்சாலையாகஅமைக்கும்பணி | 17,2 மற்றும் 4 | 1,300 | 4 முதல் 6 முடிய | 100.00 |

மேற்கண்ட தமிழ்நாடு நகர்புறசாலைகள் மேம்பாட்டுதிட்டம் 2019-20ல் மேற்கண்டவாறு நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் பணியினைமேற்கொள்ளமன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு.

1. மன்றம்அனுமதிவழங்கலாம்.
2. மேற்கண்டதிட்டத்தின்கீழ்ஒதுக்கீடுசெய்யப்படும்மான்யம்போகமீதத்தொகையினைநகராட்சிபொதுநிதியிலிருந்துமேற்கொள்ளவும்மன்றம்அனுமதிவழங்கலாம்.

ந.க.எண். 3521/2019/இ1

| | |
|---|---|
| பொருள்.2<br>திருவாரூர்நகராட்சியில்பாதாளச்சாக்கடைதிட்டப்பணிகள்மேற்கொள்வதற்குதமிழ்நாடுகுடிநீர்வடிகால்வாரியத்தின்மூலம் 2006ம் ஆண்டுமுதற்கட்டமாகவும்அவற்றினைஐந்துபிரிவுகளாகவும் (Zone I to V)இத்திட்டத்தினைசெயல்படுத்திநகராட்சிநிர்வாகம்மற்றும்குடிநீர்வழங்கல்துறைஅரசாணைஎண் 16 நாள்.01.06.2006ன்படி ரூ.39.26 கோடிக்குநிர்வாகஅனுமதிபெறப்பட்டுபின்னர் ரூ.53.07 கோடிக்குதிருத்தியநிர்வாகஅனுமதியினைநகராட்சிநிர்வாகம்மற்றும்குடிநீர்வழங்கல்துறைஅரசாணை எண்.132 நாள்.28.02.2011ன் படிபணிகள்மேற்கொள்ளப்பட்டது.<br>மேற்படிபணிநிலவியல்தன்மைக்கேற்பபணியினைஒருசிப்பமாகவார்டு எண்.13,15,16,18,22,24,25,28,30களில் முழுமையாகவும் 1 முதல் 12 வரை (பகுதி), 14(பகுதி), 17(பகுதி), 19,20,21(பகுதி), 23,26,27 மற்றும் 29 பகுதியில்பாதாளச்சாக்கடைஅமைக்கும்பணியும், கேக்கரைகிராமத்தில் 6.92 MLD கொள்ளளவுகொண்டகழிவுநீர்சுத்திகரிப்புநிலையமும்அமைக்கப்பட்டுதற்போதுஇயக்குதல்மற்றும்பராமரிப்புபணிகள்நடைபெற்றுவருகிறது.<br>திருவாரூர்நகராட்சியில்பாதாளச்சாக்கடைதிட்டம்செயல்படுத்தப்படாமல்விடுப்பட்டவார்டுகளை 1முதல் 12 வரை (பகுதி), 14,17,19,20,21,23,26,27,29(பகுதி) ஆகியவார்டுகளுக்குபாதாளச்சாக்கடைதிட்டம்செயல்படுத்தவிரிவானதிட்டஅறிக்கையினைதனியார்கலந்தாலோசகரைநியமித்துதயார்செய்யவும், அதனை PDGF நிதிமூலம்செய்யவும்மன்றஅனுமதிக்குபொருள்வைக்கப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>மன்றம்அனுமதிவழங்கலாம்.<br>ந.க.எண்.454/2001/இ | மன்ற தீர்மான எண்.102 அனுமதிக்கப்பட்டது |

இடம் ..திருவாரூர்
நாள்..06.09.2019

ஓம்/-என். சங்கரன்
ஆணையர்/ தனி அலுவலர்,
திருவாரூர் நகராட்சி.

**விகாரி ஆண்டு புரட்டாசி 13ம் 30.09.2019ம் தேதி திங்கட்கிழமை காலை 10.30மணிக்கு திருவாரூர் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடைபெறும் அப்பொழுது கீழ் கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் முன்னிலை.திரு.என். சங்கரன் பிகாம்,எச்டிசிம்., ஆணையர் மற்றும் தனி அலுவலர்**

| பொருள் எண் மற்றும் கூட்ட பொருள்கள் விபரம் | தீர்மான எண். |
|---|---|
| பொருள்.1<br>இந்நகராட்சி பகுதிகளில் வார்டு எண்.2 பிளாக் எண்.48 நகரளவு எண்.2964/2 -ல் 55972.80 சதுர அடி பரப்பளவு கொண்ட அனுமதியற்ற குடியிருப்பு மனைபிரிவினை வரன்முறைப்படுத்துதல் அரசாணை எண்.78 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.04.05.2017ன்படி குடியிருப்பு மனைபிரிவுக்கு ந.க.எண்.3834/2018/த.ம3ன்படி நகரஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களால் கொள்கையளவில் ஒப்புதல் அளித்து வரைபட உத்தரவு வரப்பட்டுள்ளது.<br>மேற்கண்ட அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவில் வரைபடத்தில் கண்டுள்ளவாறு சாலை ஒன்று 400.50 சதுர மீட்டர், சாலை இரண்டு 402.00 சதுர மீட்டர், மூளை முடக்கு 2.40 சதுர மீட்டர் மற்றும் பூங்கா (378.00 சதுர மீட்டர்) ஆகியவைகளை நகராட்சி பெயருக்கு தானபத்திரம் மூலம் பதிவு செய்து நகராட்சி ஆணையர் பெயரில் பதிவு செய்துள்ளார்.<br>மேற்கண்ட அனுமதியற்ற குடியிருப்பு மனை பிரிவில் அமையபெற்றுள்ள பூங்கா மற்றும் சாலை நகராட்சி பெயருக்கு தான பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளதை | மன்ற தீர்மான எண்.103 அனுமதிக்கப்பட்டது |

மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3185/2019/எப்1

பொருள்.2

மன்ற தீர்மான எண்.104 அனுமதிக்கப்பட்டது

திருவாரூர் நகராட்சியில் பொதுநிதி திட்டம் 2019-20ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு 25.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதனை தொடர்ந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீட்ட தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதத்தில் |
|---|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலையத்தில் மூன்று சக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்கும் பணி | 9.40 | திருமதி.எம்.தேன்மொழி ஒப்பந்ததாரர் திருவாரூர் | 0.42% சதவிகிதம் குறைவு |
| | | | திரு.எல். மணிகண்டன் ஒப்பந்ததாரர், திருவாரூர். | 0.64% சதவிகிதம் அதிகம் |
| 2 | புதிய பேருந்து நிலையத்தில் மினிபவர்பம்ப் அமைக்கும் பணி | 1.60 | திரு.பி.லோகநாதன் ஒப்பந்ததாரர் திருவாரூர் | 0.16% சதவிகிதம் அதிகம் |
| | | | மெர்சஸ். ஜே.எம். கன்ஸ்ரக்ஷன், திருவாரூர். | 0.14% சதவிகிதம் குறைவு |
| 3 | நெய்விளக்கு தோப்பு பொது கழிப்பிடத்திற்கு ஆழ்துளை கிணற்றின் நீர்மூழ்கி மோட்டார் அமைக்கும் பணி | 2.00 | திருமதி.எம்.தேன்மொழி ஒப்பந்ததாரர் திருவாரூர் | 2.30% சதவிகிதம் அதிகம் |
| | | | திரு.எல். மணிகண்டன் ஒப்பந்ததாரர், திருவாரூர். | 0.04% சதவிகிதம் குறைவு |
| 4 | பாதாளச் சாக்கடை கழிவு நீர் மோட்டார்களை பழுதுநீக்கம் செய்யும்பணி | 5.60 | திரு.எஸ். தணிகாசலம் ஒப்பந்ததாரர் திருவாரூர் | 1.72% சதவிகிதம் அதிகம் |
| | | | மெர்சஸ். வி.பி.அசோசியட்ஸ், சென்னை. | 0.52% சதவிகிதம் குறைவு |

மேற்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காணும் பணிகளுக்குண்டான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனமதி வழங்கலாம்.

பொருள்.3

மன்ற தீர்மான எண்.105 அனுமதிக்கப்பட்டது

திருவாரூர் நகராட்சியின் மூலம் கடந்த மூன்றாண்டுகளில் செயல்படுத்தப்பட்ட திட்டப்பணிகளின் விவரங்களை கீழ்கண்ட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கான விளம்பர கட்டணத்தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | விளம்பர நிறுவனங்களின் விபரம் | விளம்பர கட்டணத்தொகை |
|---|---|---|
| 1. | தினதந்தி (கடந்த மூன்றாண்டுகளில் செயல்படுத்தப்பட்ட பணிகளின் விபரம்) | ரூ.28560/- |
| 2. | தஞ்சை முரசு (ப)லிமிடெட். தமிழக அரசின் இரண்டாண்டு சாதனை சிறப்பு மலர் - 2019 | ரூ.15750/- |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட நிறுவனங்களுக்கான விளம்பரக்கட்டணத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1130/2018/இ

பொருள்.4

மன்ற தீர்மான எண்.106 அனுமதிக்கப்பட்டது

திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான அனைத்து பள்ளிகூடங்களிலும் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைப்பதற்கு 12.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர்களின் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திருவாரூர் நகராட்சி பராமரிப்பில் உள்ள பள்ளிகளுக்கு மழைநீர் சேகரிப்பு அமைக்கும் பணி.<br>1. கொள்ரிசாமி நகராட்சி நடுநிலைப்பள்ளி<br>2. கேக்கரை நகராட்சி துவக்கப்பள்ளி<br>3. கொடிக்கால் பாளையம் | ரூ.586995/- | திரு.எஸ்.தணிகாசலம், ஒப்பந்ததாரர் திருவாரூர் | 0.13% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடுநிலைப்பள்ளி<br>4. பாபாகோபால்சாமி நடுநிலைப்பள்ளி<br>5. சபாபதி முதலியார் நகராட்சி உயர்நிலைபள்ளி<br>6. விஜயபுரம்நகராட்சி துவக்கப்பள்ளி<br>7. கே.டி.ஆர். நகராட்சி துவக்கப்பள்ளி | | திரு.எஸ். ரெங்கசாமி, ஒப்பந்ததாரர், திருவாரூர். | 0.37% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.தணிகாசலம், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு தனி அலுலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கப்பட்டதனையும் மன்றம் அனுமதிக்கலாம்.

மன்ற தீர்மான எண்.107 அனுமதிக்கப்பட்டது

பொருள்.5

திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான பழைய தஞ்சை சாலையில் அமைந்துள்ள இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிட கட்டிடமானது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதனை இடித்து அப்புறப்படுத்துதல் மற்றும் அப்பொருட்களை ஏலரதாரரே எடுத்துக்கொள்ளும் பணிக்கு 12.09.2019 அன்று மறுபொது ஏலம் (நான்காவது அழைப்பு) விடப்பட்டதில் கீழ்கண்ட ஏலதாரர்கள் கலந்து கொண்டவர்களின் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | ஏலதாரர்களின் விபரம் (திருவாளர்கள்) | ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1. | எம்.ஸ்ரீதரன், த/பெ.எஸ். முத்துகுமாரசாமி, 48, பிடாரி கோவில் தெரு, திருவாரூர். | ரூ.2,75,000/- |
| 2. | ஆர். அண்ணாதுரை, த/பெ,ராஜன், 4A/4. தர்மகோவில் தெரு, திருவாரூர் | ரூ.2,55,000/- |
| 3. | ஏ.சுரேஷ்குமார், நெய்விளக்கு தோப்பு, திருவாரூர். | ரூ.3,00,000/- |
| 4. | எஸ்.ரமேஷ் குமார், ஆவணித்தெரு, திருவாரூர் | ரூ.2,70,000/- |
| 5. | என்.ராமசந்திரன், த/பெ.நடராஜன், 34D. திருமஞ்சன வீதி, திருவாரூர். (ஒப்பந்தப்புள்ளின் மூலம் கோரப்பட்டது) | ரூ.3,60,000/- |

மேற்கண்ட ஏலத்தாரர்களில் அதிகபட்சமாக ஒப்பந்தப்புள்ளிகளின் மூலம் கோரப்பட்ட திரு.என்.ராமசந்திரன், த/பெ.நடராஜன், 34D.திருமஞ்சனவீதி, திருவாரூர் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியினை எற்க மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்காக பொது ஏலத்தில் உயர்ந்தபட்ச

| | |
|---|---|
| ஏலக்கேள்வி ஒப்பந்தப்புள்ளியின் மூலம் கோரிய திரு.என்.ராமசந்திரன், 34D திருமஞ்சன வீதி, திருவாரூர் என்வரின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வினை ஏற்கலாம்.<br>3. மேலும் மேற்கண்ட பணியின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கப்பட்டதனையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 4322/2018/இ1 | |
| பொருள். 6<br>திருவாரூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை 2015-16 பணிகளுக்காக இரண்டாவது மாநில அளவிலான உயர்மட்டகுழு கூட்ட நடவடிக்கைகளின் கீழ் ரூ.114.96 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதனை தொடர்ந்து 7 எண்ணிக்கையிலான பணிகள் தேர்வு செய்யப்பட்டு 6 எண்ணிக்கையிலான பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு பணியான "Supply and Fixing Organic Pulveriser Machine" பணிக்கு மதிப்பீடு ரூ.34.60 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறை கடிதம் எண்.392/2016/இ2 நாள்.01.06.2016ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் பணிக்கு நான்கு முறை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு எவரும் ஒப்பந்தப்புள்ளி கோரி முன்வராத காரணத்தினாலும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வு நடவடிக்கையின்படி பணியானது முற்றிலும் கைவிடப்பட்டது என்ற விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>2. மேற்கண்ட பணியானது மேற்கொள்ளப்படாமல் கைவிடப்பட்ட காரணத்தினை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.9115/2016/இ1 | மன்ற தீர்மான எண்.108 அனுமதிக்கப்பட்டது |
| பொருள்.7<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்துவரும் பாதாளச்சாக்கடை திட்டத்தின் கழிவுநீர் சேகரிப்பு அமைப்பு, கழிவுநீரேற்ற நிலையங்கள், நீரிரைப்பு நிலையங்கள் மற்றும் கழிநீர் உந்து நிலையங்கள் மற்றும் கழிவு நீர் சேகரிப்பு மற்றம் பாதாளச் சாக்கடை தொடர்பான இதர அமைப்புகள் ஆகிய ஒட்டு மொத்த அமைப்பினையும் பராமரிப்பு செய்யும் பணியினை 27.10.2016ல் மூன்றாண்டுகளுக்கு மேற்கொள்ள மெர்சஸ். V.B. அசோஸியேட்ஸ், சென்னை நிறுவனத்திற்கு பணி உத்தரவு இவ்வலுவலகம் மூலம் வழங்கப்பட்டுள்ளது அதனைத் தொடர்ந்து மேற்கண்ட பணியினை அன்னாரால் வழங்கப்பட்டுள்ள மதிப்பீட்டு விலையில் ரூ.73.60.440/-ல் ஆண்டுக்கு ஆறு சதவிகிதம் உயர்த்தப்படுமென ஒப்பந்த நிபந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.615 நாள்.15.09.2016ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.<br>மேலும் தற்போது மெர்சஸ்.V.B. அசோஸியேட்ஸ், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்த பணிக்காலமானது 26.10.2019 அன்றுடன் முடிவடையும் நிலையில் உள்ளது.மேற்படி நிறுவனத்தினால் மூன்றாம் ஆண்டிற்கு பணி மேற்கொள்ள சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து மூலம் 13.09.2019ல் ஒப்புதல் கடிதம் பெறப்பட்டுள்ளது.இந்நகராட்சியில் பாதாளச் சாக்கடை பணியானது மெர்சஸ். V.B. அசோஸியேட்ஸ், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்த அடிப்படையில் கடந்த மூன்றாண்டுகளாக பராமரிப்பு பணியானது நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் முழுமையாக மேற்கொள்வதனை கருத்தில் கொண்டு மேலும் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த படிவத்தில் (Tender Document) Section-II Part-1 GENERAL STIPULATIONS AND CONDITIONS, Serial No.2, Duration, Works comprised in contract and Extensions. Any further extension will be at the sole discretions of Tiruvarur Municipality. During the extension periods, the annual increment will be limited to six percent of the annual charges paid on the previous year I,e 12 months period immediately before the extension-ல் | மன்ற தீர்மான எண்.109 அனுமதிக்கப்பட்டது |

உள்ளபடி அடுத்த மூன்றாண்டுகளுக்கு நீடிப்பு செய்ய கீழ் கண்ட விவரப்படி ஏற்கனவே உள்ள ஒப்பந்த ஆவனத்தின் படி மூன்றாண்டுகள் பராமரிப்பு பணிகள் செய்து தன்மையை பொறுத்தும் மூன்றாவது ஆண்டு வழங்கப்பட்ட தொகையில் 6 சதவிகிதம் உயர்வு அளித்தும் நீடிப்பு செய்யலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் படி அடுத்து வரும் மூன்றாண்டுகளுக்கு கீழ்கண்ட விவரப்படி மூன்றாண்டு காலத்திற்கு (27.10.2019 முதல் 26.10.2022 வரை) ஒப்பந்த நிபந்தனைகளின்படி பராமரிப்பு பணிகள் செய்வதற்கான காலத்தினை நீட்டிப்பு செய்து உரிய அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

விவரம் பின்வருமாறு,

| வ.எண் | பராமரிப்பு ஆண்டு | பராமரிப்பு தொகை ரூ. | 6 சதவீதம் கூடுதல் தொகை | மொத்த பராமரிப்பு தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | முதலாம் ஆண்டு (27.10.2019 முதல் 26.10.2020 வரை) | 8270190 | 496211 | 8766401 |
| 2 | இரண்டாம் ஆண்டு (27.10.2020 முதல் 26.10.2021 வரை) | 8766401 | 525984 | 9292385 |
| 3 | மூன்றாம் ஆண்டு (27.10.2021 முதல் 26.10.2022 வரை) | 9292385 | 557543 | 9849928 |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பராமரிப்பு பணிக்குண்டான செலவினத்தை நகராட்சியின் பாதாளச்சாக்கடை திட்ட நிதியிலிருந்தே மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்காணும் பராமரிப்பு பணியினை ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு பணியினை மூன்றாண்டு காலத்திற்கு நீட்டித்து வழங்ககோரி மெர்சஸ். V.B. அசோஸியேட்ஸ், சென்னை நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட ஒப்புதல் கடிதத்தினை மன்றம் பார்வையிட்டு கால நீட்டிப்பு செய்ய அனுமதிக்கலாம்.
4. தற்பொழுது 27.10.2019 முதல் 26.10.2020 வரை ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு பணி உத்தரவு வழங்கலாம்.

ந.க.எண். 454/2001/இ1

பொருள்.8

மன்ற தீர்மான எண்.110 அனுமதிக்கப்பட்டது

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யும் நீர்தேக்க நிலையங்களான சந்தைப்பேட்டை, மடப்புரம், தென்றல் நகர், கிடாரம் கொண்டான் மற்றும் ஐ.பி.கோவிலிருந்து விநியோகிக்கப்படும் குடிநீரின் பாதுகாப்பு நலன் கருத்தில் கொண்டு நீர்த்த குளோரினை கொள்முதல் செய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கண்டான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள்.9

மன்ற தீர்மான எண்.111 அனுமதிக்கப்பட்டது

திருவாரூர் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள 1) பெருமாள் மேலவீதி, மடப்புரம் 2)வ.உ.சி தெரு, 3)இ.வி.எஸ் நகர் 4)கொடிக்கால் பாளையம் மற்றும் 5) வாசன் நகர்களில்

உள்ள பூங்காக்களில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகளின் அருகாமையில் புதியதாக சிண்டெக்ஸ் டேங்குகள் அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்த மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

---

பொருள்.10

மன்ற தீர்மான எண்.112 அனுமதிக்கப்பட்டது

திருவாரூர் நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மையின் கீழ் நகராட்சி உரக்கிடங்கில் இருக்கும் குப்பைகளை தரம் பிரித்து உயிரின செரிமான கொள்கலன் மூலம் உரம் தயாரிக்கும் பணி மற்றும் நுண்உயிரி உரகிடங்கு சிமெண்ட் சாலை மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகளை மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமை செயலகம், சென்னை அவர்களின் மூலம் கீழ்கண்ட நிறுவனங்களின் வழியாக விளம்பரம் செய்யப்பட்டமைக்கான விளம்பரம் கட்டணத்தினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | விளம்பர நிறுவனத்தின் விபரம் | விளம்பரக்கட்டண |
|---|---|---|
| 1 | Bright Advertising, Chennai | ரூ.55282/- |
| 2 | Madhu Advertising, Chennai | ரூ.72188/- |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட நிறுவனங்களுக்கான விளம்பரக் கட்டணத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1130/2018/இ1.

---

பொருள்.11

மன்ற தீர்மான எண்.113 அனுமதிக்கப்பட்டது

இந்நகராட்சி பணியாளர்களுக்கு தீபாவளி முன்பணம் ரூ.5000.லிருந்து ரூ.10,000 வழங்க அரசாணை எண். 240 நாள்.02.08.2019 வரப்பெற்றுள்ளது. எனவே அரசாணையின் படி தீபாவளி முன் பணம் இந்நகராட்சி பணியாளர்களுக்கு ரூ.10,000 வழங்க அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.3932/2018/பி1

ஒம்/-என். சங்கரன்
ஆணையர்/ தனி அலுவலர்,
திருவாரூர் நகராட்சி.

இடம் ..திருவாரூர்
நாள்..30.09.2019